1981 ஜனவரி 31]

(இ) குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அந்தக் குழுவின் அறிக்கை அரசாங்கத்திற்கு வந்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவிலே ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் மற்ற சலுகைகள் மட்டுமல்லாமல். அங்கே இருக்கக்கூடிய நான் டீச்சிங் ஸ்டாபாக இருக்கக்கூடிய மற்ற ஊழியர்களின் விஷயங்களும் அதில் அடங்கியிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அடங்கியுள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, எந்தக் கால அளவிற்குள் அரசு அந்தச் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்வது அல்லது திருத்தம் செய்து வெளியிடுவது என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இன்னும் 10 நாட்களுக்குள்

மார்த்தாண்டம்—பேச்சிப்பாறை சாலையிலுள்ள பாலம்.

வினா எண். 132—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: திரு. டி. மணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர். கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுகாவில் மார்த்தாண்டம் பேச்சிப்பாறை சாலையில் 5, 6 கிலோ மீட்டரில் உள்ள இரும்புப் பாலமானது சாலை மட்டத்திலிருந்து அதிகமாகத் தாழ்ந்துள்ளதால் அங்கு போக்குவரத்து தடைபட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஒரே நேரத்தில் ஒரு பஸ்ஸுக்கு மேல் போக முடியாத அளவிற்கு அந்தப் பாலம் குறுகியதாக இருக்கிற காரணத்தாலும், 50 ஆண்டுக் காலத்திற்கு முன்பு அது கட்டப்பட்டது என்ற காரணத்தாலும், அந்த மார்த்தாண்டம் பேச்சிப்பாறை ரோடு மிக முக்கிய சாலையாக இருக்கிற காரணத்தாலும், அந்தப் பாலத்தை அகலப் படுத்தி புதுப்பாலம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அது திருவெட்டாறு பாலமாகும். அதைத் திருத்தியமைக்க வேண்டும் என்று சொன்னால் 24 லட்ச ரூபாய் செலவாகும். இப்போது இருக்கக்கூடிய நிதி நிலைமைக்கு ஏற்பத்தான் திட்டங்கள் தீட்டப்படவேண்டும். ஆகவே நிதிநிலை சீரான பின்னால் அது கவனிக்கப்படும்.

போடி தொகுதியில் புதிய பாதை அமைப்பு.

*வினா எண். 133—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம் போடித் தொகுதியில் பண்ணைப் புரத்தில் இருந்து சாக்குலூத்து மெட்டு வழியாக கேரளா செல்ல சாலை ஏதும் புதிதாக அமைப்பது பற்றிய திட்டம் அரசு பரிசீலனையில் இருக்கின்றதா?

(ஆ) ஆம் என்றால் அந்தப்பணி எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: தலைவரவர்களே 1958-ல் $26\frac{1}{2}$ இலட்சம் ரூபாய்க்கும், 1963-ல் 30 இலட்சம் ரூபாய்க்கும், 1979-ல் 52 இலட்சம் ரூபாய்க்கும் மதிப்பீடு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தச் சாலையை அமைக்க வேண்டுமென்று திட்டம் தீட்டி அனுப்பியுள்ளார்கள். இந்த சாலை அமைக்கப்படுவதினால் மதுரை—கொச்சின் தூரம் ஏறத்தாழ 60 மைல் குறைகிறது என்று சொல்கிறார்கள். அப்படி இருந்தும் இந்தச் சாலைப் பணியை இன்னும் எடுத்துக்கொள்ளாததற்கு என்ன காரணம்? அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகளும், தொழிலாளர்களும் கடந்த 30 ஆண்டுக்காலமாக இந்தச்சாலையை எதிர்பார்த்து, காத்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்குறுதி கொடுத்தும் இந்தப் பணி நடைபெற முடியவில்லை. ஆகையால் மக்கள் சேவைக்காகப் பாடுபடும் நம்முடைய புரட்சித் தலைவர் அரசு உடனடியாக இந்தச் சாலையை அமைக்க முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்தச் சாலை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் தமிழ்நாடு-கேரள மாநிலங்கள் எல்லையில் அமைந்திருக்கிறது. இதைப் போட வேண்டுமென்றால் ஏறத்தாழ 8 கிலோமீட்டர் தூரத்திற்குப் பாட வேண்டும். அப்படிப் போடுவதாக இருந்தால் ஏறத்தாழ